செ.வெ.எண் : 20/பிப்ரவரி நாள்: 10.02.2016

**இராமநாதபுரம் மாவட்டம்**

**பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் தாய்சேய் நல சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து பார்வையிட்டார்**

இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று (10.02.2016) மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தாய்சேய் நல சிறப்பு மருத்துவ முகாமினைத் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக தமிழகம் முழுவதிலும் மொத்தம் 680 தாய்சேய் நல சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தாய்சேய் நல சிறப்பு மருத்துவ முகாமினைத் துவக்கி வைத்து பார்வையிட்டார். இம்முகாமில் கலந்து கொண்ட கர்ப்பிணி பெண்களுக்கு தாய்சேய் நல மருத்துவர்கள் மூலமாக இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்தம் மற்றும் சிறுநீரில் உள்ள சர்க்கரை அளவு, மஞ்சள்காமாலை பரிசோதனை உள்ளிட்ட முழு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் கர்ப்பிணிப் பெண்களுக்கு இலவச ஸ்கேன் பரிசோதனை மற்றும் டி.டி.தடுப்பூசி போடப்பட்டன. இம்முகாமில் கருவுற்ற கர்ப்பிணிப் பெண்கள், தாய்மார்கள், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள், ஏராளமானோர் கலந்து கொண்டு இலவச மருத்துவ பரிசோதனை மேற்கொண்டு பயனடைந்தனர்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெற்று குழந்தை பெற்றெடுத்த 2 தாய்மார்களுக்கு அம்மா குழந்தைகள் நல பரிசுப் பெட்டகத்தினையும், 2 பயனாளிகளுக்கு டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் பேறுகால நிதியுதவித் தொகை வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்ட விவரங்கள் அடங்கிய தகவல் அறிவிப்பு படிவத்தினையும் வழங்கினார்.

அதன்பின்பு கமுதி ஊராட்சி ஒன்றியம், முஸ்டக்குறிச்சி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பாக நடைபெற்ற குடற்புழு நீக்க சிறப்பு முகாமில் குழந்தைகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சுகாதாரத்துறை துணை இயக்குநர் (பொ) மரு.பவானி உமாதேவி , வட்டார மருத்துவ அலுவலர் மரு.கே.ரமேஷ், பள்ளியியல் உதவி இயக்குநர் திரு.சிராஜுதின், மாவட்ட தாய்சேய் நல அலுவலர் திருமதி.மு.பெரியகண்ணு உட்பட அரசுத்துறை அலுவலர்கள், செவிலியர்கள், மாணவ, மாணவியர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது**